# 16 பொய் சொல்லாதே

நாட்டுப்புற மக்களால் பாடப்பட்டவை நாட்டார் பாடல்கள். இப்பாடல்கள் வாய்மொழி வழியாக வளர்த்து வரப்பட்டவை. நாட்டுப்புற மக்கள் வேலைகளில் ஈடுபடும்பொழுது களைப்பை மறக்க பாடல்களைப் பாடுவர். ஆணும் பெண்ணும் கூடி வேலை செய்யும் போது வேடிக்கைப் பாடல்களையும் பாடுவது வழக்கம். அப்படிப்பட்ட வேடிக்கை கதைப்பாட்டுத்தான் ''பொய் சொல்லாதே'' என்பதாகும். பிள்ளைகளும் சிறுவயதிலிருந்தே உண்மை பேசிப் பழக வேண்டும். தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும் என்பார்கள். இந்தப் பாட்டை நாமும் பாடி, பொய் சொல்வதால் வரும் தீங்கையறிந்து, உண்மையைப் பேசி, எச்சந்தர்ப்பத்திலும் பொய் சொல்லக் கூடாது என்பதை உணருவோம்.

## (வேடிக்கைக் கதைப் பாட்டு)

இராசா வீட்டின் முற்றமதில்
நனைந்த சீனி காய்ந்ததுவே
இராமன் அங்கே போயிருந்தான்
காய்வது என்ன பொருள் என்றான்

இராசா மலையின் மண்ணென்றார்
இராமன் எழுந்து போய்விட்டான்
இராசா தனக்குப் பொய்சொன்னார்
என்றே இராமன் யோசித்தான்

போன இராமன் யோசனையில்
புத்தி ஒன்று புகுந்ததுவே
தானே அந்தச் சீனிஎல்லாம்
தின்று தொலைக்க வழிகண்டான்

மகனை அழைத்தே இதுசொல்வான்
மன்னன் வீட்டில் நான் இருப்பேன்
வடக்கன் மாடு செத்ததென்று
வந்தங் கெனக்குச் சொல்லென்று

மன்னன் வீட்டில் அவன்இருக்க
மகனும் எழுந்தே ஓடிவந்தான்
என்ன மகனே அழுகின்றாய்
என்று ராமன் கேட்டிடவே

எங்கள் எருது வலிவந்து
இறந்து விட்ட தென்றுசொல்ல
அங்கே இராமன் அதுகேட்டு
அலறி விழுந்தான் சீனியின்மேல்

ஆசை எருது போயிற்றே
ஐயோ ஐயோ இனிஎனக்கு
வாய்மண் வாய்மண் என்றுசொல்லி
காயும் சீனி தனை அள்ளி

வாரி அடைந்தான் வாய்க்குள்ளே
வயிறும் நிரம்பி விட்டதுவே
மகனும் உனக்கும் உன்தாய்க்கும்
வாய்மண் போட என்றுசொல்லி

அள்ளிக் கொடுத்தான் சீனிஎல்லாம்
அரசன் சீனி தொலைந்ததுவே
பள்ளிப் பிள்ளைகள் கேட்டீரோ?
பகிடிக்கும் பொய் சொல்லாதீர்.

### அரும்பதங்கள்

முற்றம் - வீட்டின் முன்பகுதி
வாய்மண் - ஏமாற்றம் / இறந்தவர்களுக்கு கடைசியில் போடும் மண்
பகிடி - நகைச்சுவை

### கிரகித்தல் பயிற்சி

1. இராசா வீட்டின் முற்றத்தில் காய்ந்த பொருள் என்ன?
2. இராமன், இராசா வீட்டின் முற்றத்தில் காய்வது என்ன பொருள் என்று கேட்ட பொழுது இராசா சொன்ன பதில் யாது?
3. இராமன் சீனி எல்லாம் தின்று தொலைக்க கண்ட வழி என்ன?
4. இந்தப்பாட்டை படித்த பொழுது உங்கள் மனதில் தோன்றியவற்றை எழுதுக.

### மொழித்திறன் விருத்திச் செயற்பாடு

1. இது போன்ற நாட்டார் பாடல்களைத் தொகுக்குக.
2. இக்கதைப்பாடலை வசன நடையில் எழுதுக.
3. இதில் உள்ள விழுமியக் கருத்துக்குப் பொருந்தக்கூடிய பழமொழிகள் ஐந்தைத் தேடி எழுதுக.

# வினைச் சொல்

உண், வா, போ, பாடு, தா

உண்டான், வந்தான், பாடினான், தந்தான்

உண்ட, வந்த, போன, பாடிய, தந்த
போன்ற சொற்களை வினைச் சொற்கள் என்பர்.

இச்சொற்களை நோக்கும் போது ‘‘வினையென்பது ஒரு செயலைக் குறிக்கும்’’. வினைச்சொல்லின் இலக்கணச்சிறப்பு காலங் காட்டுவதாகும்.

| | | |
|---|---|---|
| உ-ம்: | உண்டாள்<br>வந்தாள் | இறந்தகாலம் |
| | உண்கிறாள்<br>வருகிறாள் | நிகழ்காலம் |
| | உண்பாள்<br>வருவாள் | இறந்தகாலம் |

வினைச்சொற்கள் பல முக்கிய இயல்புகளைக் கொண்டிருக்கும். அவற்றுள் சில பின்வருமாறு:

★ வினைச் சொற்கள் வேற்றுமை உருபை ஏற்றுக்கொள்வதில்லை.

★ வினைச்சொல் ஒரு செயலை உணர்த்தும்.

★ வினைச் சொல் காலம் காட்டும்.

★ வினைச் சொற்கள் ஏவற் பொருளில் வரும்.

**பயிற்சி**

*1.* வினைச்சொற்களுக்கான வரைவிலக்கணத்தைக் கூறுக.

*2.* ''பொய் சொல்லாதே'' என்ற பாடல் பகுதியிலிருந்து வினைச் சொற்களைத் தொகுக்குக.

*3.* வினைச் சொற்களின் இயல்புகள் நான்கினைத் தருக.